நகராட்சி நிர்வாக ஆணையர்
அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை–5.

<u>சுற்றறிக்கை</u>

ந.க.எண். 23834/98/ந4 நாள். 9.4.99.

பொருள்: கல்வி வரி – நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் – கல்வி வரி மூலம் (Education Cess) ஈட்டும் நிதியினை அந்த உள்ளாட்சிப் பகுதிக்குள் அமைந்திருக்கும் பள்ளிகளின் மேம்பாட்டிற்காக செலவழிக்க அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

பார்வை: அரசாணை(நிலை) எண். 65 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.4) துறை நாள். 2.3.99.

...

பார்வையில் சுட்டியுள்ள அரசு ஆணையின் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

(அ) அரசு ஆணையில் கூறப்பட்டுள்ளதுபோல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் கல்வி வரியாக வசூலிக்கப்படும் தொகையில் ஒவ்வொரு பள்ளிக்கும் குறைந்தது ரூ. 10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) பள்ளி மேம்பாட்டிற்காக செலவிடப்படவேண்டும். இந்த தொகை ஒவ்வொரு ஆண்டும் 20% வீதம் உயர்த்தப்பட வேண்டும்.

(ஆ) கல்வி வரியாக வசூலிக்கப்படும் மொத்தத் தொகையில் குறைந்தபட்சம் 25% தொகையாவது பள்ளிக் கட்டிடங்களின் பராமரிப்பிற்காக செலவிடப்பட வேண்டும்.

(இ) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்படவிருக்கும் பராமரிப்பு பள்ளிகள் பற்றிய விபரங்கள் சம்பந்தப்பட்ட முதன்மைக்கல்வி அதிகாரிக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

(ஈ) அதேபோல் சம்பந்தப்பட்ட முதன்மை கல்வி அதிகாரி தேவையெனக் கருதும் பள்ளிக்கட்டிட பராமரிப்பு பள்ளி பற்றிய விபரங்களை சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தெரிவிக்க வேண்டும். உள்ளாட்சி நிறுவனங்கள் செயல்படுத்தும் பள்ளிகளில் இவற்றையும் சேர்த்துக் கொள்ள கருதப்பட வேண்டும்.

(உ) மேலே 'அ' மற்றும் 'ஆ'–ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகை பராமரிப்புப் பணிகளுக்கு மட்டும் பொருந்தும். இதை தவிர தேவையான பிற மூலதனப்பணிகளும் (கூடுதல் வகுப்பறைகள், புதிய கட்டிடங்கள், கழிவறைகள் போன்றவை) மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த பணிகளுக்கானும் செலவினத்திற்கு எந்தவித உச்சவரம்பும் இல்லை.

(ஊ) கல்வி வரியாக வசூலிக்கப்படும் தொகையை பொதுக் கணக்கிற்கு மாற்றம் செய்யக்கூடாது. உள்ளாட்சி அமைப்புகள் மேற்கண்ட பணிகளை கல்வி வரியிலிருந்து மேற்கொள்ள இதற்கென தனியாக ஒரு கணக்கு பராமரிக்க வேண்டும்.

மேற்கண்ட அறிவுரைகளை தவறாமல் கடைபிடிக்குமாறு அனைத்து நகராட்சி ஆணையர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இச்சுற்றறிக்கையைப் பெற்றுக் கொண்டமைக்கு அனைத்து நகராட்சி ஆணையர்களும் உடன் ஒப்புதல் அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்) தி. [illegible]
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.

பெறுநர்
அனைத்து நகராட்சி ஆணையர்கள்

நகல்: அனைத்து மண்டல நகராட்சி இயக்குநர்கள்
// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

[signature]
கண்காணிப்பாளர். 15/4/99